# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 10 - 2017

- தமிழகத்தில் மத்திய அரசின் நவோதையா பள்ளிகளைத் துவங்க உயர்நீதிமன்ற மதுரை கிளை அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. கிராமபுற மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு ஜவஹர் நவோதையா வித்யாலயா பள்ளிகளை தொடங்கியது. இப்பள்ளிகளில் மாநில மொழி, ஆங்கிலம், இந்தி கற்பிக்கப்படுகின்றன.

- பொதுத் துறையைச் சேர்ந்த பிஎஸ்என்எல் நிறுவனத்தின் நெட்வொர்க் விரிவாக்க திட்ட பணிகளை செயல்படுத்தும் வகையிலான ரூ.6,000 கோடிக்கான ஒப்பந்தங்களை பின்லாந்தைச் சேர்ந்த இசட்.டி.இ நிறுவனங்கள் பெற்றுள்ளன.

- 21-வது ஜிஎஸ்டி கவுன்சில் பொதுக்கூட்டம் நிதியமைச்சர் அருண்ஜெட்லி தலைமையில் ஐதராபாத்தில் 09-09-17 அன்று நடைபெற்றது.

- சிங்கப்பூரின் 8-வது அதிபராக ஹலிமா யாக்கோப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் சிங்கப்பூரின் முதல் பெண் அதிபராவார். சிங்கப்பூர் நாட்டின் தேர்தலானது ஒவ்வொரு முறையும் ஒரு பாரம்பரியகுழுவினருக்கு ஒதுக்கப்படுகிறது. அதன்படி இம்முறை மலாய் இனத்தவருக்கு அதிபர் பதவி ஒதுக்கப்பட்டது.

- உலக பொருளாதார மன்றம் உலகின் வெவ்வேறு நகரங்களின் வருவாய், புதிய தொழில் உற்பத்தி, தகவல், தொழில்நுட்ப வளர்ச்சி, ஸ்மார்ட் போன் பயன்பாடு உட்பட பல அம்சங்களின் அடிப்படையில் நடத்திய ஆய்வில் “2017 உலகின் ஹை டெக் நிறுவனங்களின் பட்டியலில்” பெங்களூரு 19-வது இடத்தை பிடித்துள்ளது.

- அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **ராஜ் ஷா** அவர்களை வெள்ளை மாளிகை செய்தி தொடர்புத்துறை உதவி முதன்மை செயலராக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார். ராஜ் ஷா- வின் பெற்றோர் குஜராத் மாநிலத்தை சேர்ந்தவர்கள்.

❖ 2014 அக்டோபர் 2-ம் தேதி தூய்மை இந்தியா திட்டம் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப்பட்டது. இதன் மூன்றாம் ஆண்டு தொடக்கத்தையொட்டி செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 2-ம் தேதி வரையிலான 15 நாள்கள் தூய்மை தினமாக கொண்டாடப்பட உள்ளன. இந்த 15 நாட்களும் “தூய்மை சேவை” என்ற பெயரிலான இந்தப் பிரச்சார இயக்கம் தொடங்கப்படவுள்ளது.

❖ குஜராத் மாநிலம் காந்தி நகரில் சர்வதேச புத்தமத மாநாடு செப்டம்பர் 17 முதல் 23-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கையின் முன்னால் அதிபர் மகிந்த ராஜ்பட்சவும், கம்போடிய நாட்டு இளவரசர் தன்ரோ நரோடோம் கலந்து கொள்கின்றனர். சங்க கயா அறக்கட்டளையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1,000 பிரதிநிதிகளும், 200 புத்த துறவிகளும், 6,000 புத்த மதத்தினரும் கலந்து கொள்கின்றனர்.

❖ இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் அனைத்துவிதமான வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு மத்திய அரசு Contact@DGFT என்ற இணையவசதியை அறிமுகம் செய்துள்ளது. DGFT இணையதளத்தின் மூலம் மாநில மற்றும் மத்திய இயக்குநரகம் அல்லது மற்ற முகமைகளைப்பற்றிய பிரச்சனைகளை வர்த்தகர்கள் பதிவு செய்யப்படும்.

❖ செப்டம்பர் 11,12 தேதிகளில் நேபாளத்தின் காத்மாண்டில் நடைபெறவுள்ள Across Barriers - சர்வதேச வர்த்தக மகளிர் மாநாட்டை தெற்காசிய மகளிர் மேம்பாட்டு மன்றம் ஏற்பாடு செய்துள்ளது. இதன் முக்கிய குறிக்கோள் SAARC, ASEAN, சீனா மற்றும் சில நாடுகளின் பெண் தொழில் முனைவோர்களை ஒன்றினைப்பதாகும்.

❖ சென்னையில் உள்ள நவீன சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையான பிரஷாந்த் மருத்துவமனையில் உயர் துல்லியம் அறியப்படுகிற அறுவை சிகிச்சைகளுக்கு 40X மைக்ரோஸ் கோப் இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY